# தெய்வீக இசைப்பாடு

## இசைவின்மையின் உள்வயிரமாக இசைவு இருக்கின்றது

விடயங்களின் தோற்றம் அவற்றின் உண்மையான தன்மையை வெளிப்படுத்துவதில்லை. ஏதாவது ஒரு பொருளின் குறுக்கே வெட்டிய வடிவத்தை மட்டும் பார்க்குமிடத்து, அதில் எதுவும் புலப்படாது. அதை முழுமையாகப் பார்த்துவிட்டாலோ அதன் முழு அர்த்தமுள்ள உருவம் புலனாகின்றது. இங்ஙனமே, விண்வெளியினாலும் காலத்தாலும் அமைக்கப்பட்ட எல்லையற்ற படம்வரைதுணியில் (canvass) மகத்துவமுள்ள சிருஷ்டியின் ஓவியம் பரந்துள்ளது. இயற்கையின் ஒவ்வொரு பொருளும், நிகழ்வும் மகா ஓவியரின் திறமை மிக்க வரைகோடாகும். ஆனால் சாதாரண மனிதன் இதனுடைய குழப்பமுற வைக்கும் சிறுதுண்டுகளையும் பாகங்களையும் மட்டுமே காண்கின்றான்.

பிரபஞ்சத்தின் இசைநிர்வாகியால் ஏககாலத்தில் ஒருங்கிணைந்து செயற்படும் பல இசைக்கருவிகளின் ஒரு ஸ்வரம் என நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வையும் கருதவேண்டும் முழு இசையமைப்புடன் கேட்டாலொழியத் தனிமையான ஒரு ஸ்வரம் அர்த்தமற்றதாகின்றது. காலம் முழுதும் இசைக்கப்பட்ட சிருஷ்டி கர்த்தாவின் மகாபெரும் இசையமைப்பில் அணு, இறப்பு, காதல், வாழ்வு ஆகிய சகலவற்றிற்கும் ஒரு பாகம் உண்டு. தியானத்தில் ஆத்மா கடவுளுடன் இசைவுற்ற நிலையிலுள்ள பொழுது மட்டுமே இவையனைத்தும் ஒரு சாசுவத தாள இசைவில் ஒருங்கிணைகின்றன. சிருஷ்டியின் ஏறியிறங்கும் இசைவின்மையின் உள்ளரங்கில் அழிக்கமுடியாத இசைவை பகவத்கீதையில்*(1)* ஸ்ரீ கிருஷ்ண பகவான் மாறுபட்டது போலத்தோன்றும் சகலவற்றினூடேயும் சகலவும் ஒன்றிணைந்துள்ளதை உணரும்படி அரிச்சுனருக்கு தனது விஸ்வரூபத்தைக் காட்டியருளினார். பகவான் கூறியது: 'தெய்வங்கள், மனிதர் இயற்கையாகிய அனைத்துச் சாசுவதமாகிய முழுமையும் எங்கும் நிறைந்த ஆலயத்தின் பிரபஞ்ச விக்கிரகமாக என்னைக் காண்பாயாக!"

மனிதனின் அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றலின் இயல்பு எவ்வளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உனக்குச் செவிகள் உள்ளன, ஆனால் அவைகளா உண்மையில் கேட்கின்றன? உனக்குக் கண்கள் உள்ளன, ஆனால் அவைகளா உண்மையில் பார்க்கின்றன? உனக்கு இதயம் ஒன்றுள்ளது, ஆனால் அதனுடைய உணர்ச்சிகள் பிழையற்றவையா? உனக்கு ஒரு ஆத்மா உள்ளது, ஆனால் அதன் உணர்வுநிலை பரிசுத்தமான தெய்வீகத்தை வெளிக்காட்டுகின்றதா? இரவைச் சார்ந்தோர் இருளில் வாழ்கின்றனர்: பகலைச் சார்ந்தோர் ஒளியில் வாழ்கின்றனர். தங்களுடைய ஆத்மாக்களுக்குள் இருக்கும் இசைபாட்டில் பங்குகொள்பவர்கள் இயற்கையின் ஊடே செல்லும் இசைபாட்டை அறிவர். இந்த அகமுகமான இசைபாடற்ற எவரொருவரும் உலகில் அது இல்லாததாக உணர்கின்றனர். குழப்பத்தில் உள்ள மனம் எங்கணும் குழப்பத்தைக் காண்கின்றது. சாந்தத்தை என்றுமே உருசிக்காத ஒருவன் சாந்தம் எப்படியானது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்? ஆனால், புறத்தே உள்ள ஒற்றுமையின்மையின் மத்தியிலுங்கூட அகத்திற் சாந்தமுடையவன் தனது சாந்த நிலையில் இருப்பான்.

இந்தியாவில் இருந்த ஒரு இல்லற யோகியின் மனைவி கோபமே அவதாரம் எடுத்தாற் போன்றவளாக இருந்தாள். அவள் துரதிஷ்ட சோக்ரேற்றிசினுடைய மனைவியையும் விடப் பெரிதுஞ் சினங்கொண்டவளாக இருந்தாள். அந்த யோகி செய்த எதுவுமே அவளுக்கு மகிழ்வூட்டவோ அல்லது சரியானதாகப் படவோ இல்லை. அந்த யோகி தனது இயற்கையான நற்குணத்திற்கும் தனது சொந்த அகத்திலுள்ள அமைதிக்கும் இணைய அவள் காலப்போக்கில் திருந்துவாள் என்ற நம்பிக்கையில் அவளைத் தன்பாட்டிற்கே விட்டுவிட்டார். அவளோ அவரிடம் பொறுமையிழந்து, நடைமுறைப்படுத்த முடியாதெனத் தான் கருதிய அவருடைய ஆத்மீக தேட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் எனக் கடுமைமிக்க தீர்மானத்துடன் இருந்தாள். தனது ஏனைய பிசாசுத்தனமான முயற்சிகளில் தோல்வியுற்று, அவருடைய புத்தகங்களுக்குத் தீ வைத்ததின் விளைவாக தங்கள் வீட்டிற்கே தீ வைத்துவிட்டாள். இது நிகழ்ந்ததும், அந்த யோகி அவளை அணுகி "அன்புடைய பெண்ணே, உன்னை நான் என்றும் இல்லாதவாறு அதிகமாக நேசிக்கின்றேன். இதுவரை காலமும் எங்ஙனம் பொறுமையாக இருக்க வேண்டும் என்பதை எனக்கு நீ கற்பித்தாய். தற்பொழுது எனது புத்தகங்களிடமும் வீட்டினிடமும் எனக்குள்ள பாசமாகிய இறுதிப் பலவீனத்தையும் நீக்கிவிட்டாய்"எனக் கூறினார். உண்மையான யோகியின் பயிற்சி அளிக்கப்பட்டதும் அமைதியில் நிலைப்பெற்றதுமான மனதை எவர்தான் அல்லது எதுதான் குழப்பிவிட வல்லது?

## நாங்கள் கானல்நீரைத் தேடி ஓடுகின்றோம்

நாங்கள் எங்களுக்கு மிக நெருக்கமாயுள்ளவற்றை எக்காலமும் காண்பதில்லை. எங்கள் கைக்கு எட்டக்கூடிய சமீபத்திலுள்ள திரவியங்களை விடுத்து நாங்கள் கானல்நீரைத் துரத்திச் செல்கின்றோம். உண்மையில் நெடுங்காலமாக ஒளியை வேண்டியிருந்தாலும், நாம் இருளில் பாதுகாப்பைத் தேடுகின்றோம் மெய்ப்பொருளுக்காக எமது ஆத்மா தாகமுற்றுள்ளபோது, நாங்கள் தாகத்தைத் தீர்க்கும் சக்தியற்ற பொற்கனவுகளைப் பருகுகின்றோம் எங்களுடைய ஆத்மாக்களினுள் அமைந்துள்ள சாந்தம் இசைபாடு ஆகிய பாலைவனப் பசுந்தரைக்காகிய எமது ஆத்மா அடக்கமுடியாத ஆசையுறும் அதே சமயம், இல்லாத நிழலின் போலித்தோற்றங்களைத் துரத்தி ஓடுகின்றோம். புறத்தே எமது கருத்தைக் கவரும் இசைவற்ற வேறுபாடுகள் அகத்தினுள்ள இசைபாட்டின் வெறும் நிழலேயாம். புறத்தே செல்லும் மனதின் அமைதியின்மையை நீக்கி, மனதை உள்முகமாகத் திருப்புங்கள். உங்கள் ஆத்மமாக்களுக்குள் ஏற்கனவே உள்ள சகலவற்றையும் நிறைவேற்றும் உண்மைகளால் உங்கள் எண்ணங்களையும் ஆசைகளையும் இசைவுறப் பண்ணுங்கள். அப்பொழுது உங்கள் வாழ்விலும் இயற்கையிலும் அடித்தளமாக இசைபாடு இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கைகளையும் இந்த அகத்திலுள்ள இசைபாட்டுடன் சுருதிகூட்டிக் கொளவீர்களேயானால், உங்கள் வாழ்க்கை சாந்தம் எனும் இறக்கை கொண்டு மிதப்புற்றுப் பறந்து செல்லும். வேற்றுமையற்ற அமைதியை அளிக்கும் இயல்பு யோகத்தின் அழமும் அளகுமாகும்.

## இசைபாடு அன்பிலும் அறிவிலுமிருந்து பிறந்துள்ளது

இசைபாடு அன்பிலும் அறிவிலுமிருந்து பிறந்துள்ளது. இவையிரண்டும் இதயத்தின் தூய்மையிலும் பிறருக்கு உதவும் தன்மைகளிலுமிருந்து முறையே பிறந்துள்ளன.

தூய்மையான எண்ணங்களின் பயனே தூய்மையான இதயம். நல்லெண்ணங்களைத் தீய எண்ணங்களிலிருந்து பாகுபடுத்தித் தெரிவுசெய்யும் செய்முறையால் தீயவற்றை விலக்கி எப்பொழுதும் நல்லதிலேயே நிலைப் பெறுவதால் மனத்தூய்மை ஏற்படுகின்றது. மீண்டும் மீண்டும் செய்வதாலும், செயலில் அதைப் பயன்படுத்திப் பலமூட்டப்படுவதாலும் இது ஒரு சிறந்த குணமுள்ள பழக்கமாகின்றது. தவறான எண்ணங்களை அகற்றுவதால் பலவகைப்பட்ட எண்ணங்களின் முரண்பாடுகள் மனதில் முடிவுறும் பொழுது, ஒருவரின் வாழ்வின் புறத்திலும் அகத்திலும் இசைபாடு தோன்றுகின்றது. ஆகவே உங்களது எண்ணங்கள் ஒரு குடும்பச் சச்சரவில் ஈடுபடும்பொழுது, அவர்களின் வேறுபாடுகளில் அறிவுடன் தியானிப்பதால் துன்பத்தை ஏற்படுத்தும் முரண்பாடுகள் அற்றுப்போவதைக் காணுங்கள். யோக சாதனை செய்பவர்களின் அனுபவமும் சான்றும் இங்ஙனமானதே.

தேவைப்படாத எண்ணங்கள் ஆசைகள், உங்களுடைய தவறான கருத்துகள், குறைபாடுகள், மனிதருடனுள்ள உறவுகளில் பிணக்கு ஆகிய அனைத்து மனோ அழுக்குகளையும் எரித்துச் சாம்பலாக்குவதற்கு மனமே இயற்கையினது கழிவுப் பொருள்களை எரிக்கும் சாதனமாகும். உங்களுடைய பேதங்களின் பிறப்பிடமாகிய மனதில் மீண்டும் நட்பை முதலில் ஏற்படுத்தி விட்டால், எவ்வளவு பேதம் உண்டாக்கியுள்ள உறவானாலும், சீர்படுத்த முடியாத ஒரு தனி உறவேனும் இல்லை. சகல சிக்கல்களின் பிறப்பிடமும் மனமாகையால், முதலில் உங்கள் அகத்துள் அதைத் தீர்த்து விட்டால். வாழ்க்கையில் சீர்படுத்த முடியாத எந்த ஒரு சிக்கலும் இல்லை. அவற்றின் விளைவுகள் கடினமானவைகளாயிருப்பினும் அவற்றால் பயமுறுத்தப்படாதீர்கள். செயற்படுவதற்கு முன்பு முதலில் நிலைமையை உங்கள் மனதிலுள்ள சீரதூக்கும் அறிவுடன் இசையப் பண்ணிவிட்டால், அந்தச் செயலின் விளைவு தன்னையே கவனித்துக்கொள்ளும். இசைவற்றது போலத் தோன்றும் இவ்வுலகில், இசைபாடுள்ள ஒரு மனம் இசைபாட்டை உண்டாக்குகின்றது.